# கரும்புச்சாறு

ஏழாண்டுகள் இல்லற வாழ்க்கை நடத்தியிருக்கும் சிவராமனுக்கு மனைவியின் பிணக்கிற்கும் சினத்திற்கும் வித்தியாசம் தெரியாமற் போகுமா?

அவன் வீடு மீண்ட பொழுது கௌரி வரவேற்பு அளித்த பாவனையே மாறியிருந்தது. “இன்னும் இரண்டு மணி நேரம் முன்னாடி வரக்கூடாதோ?” என்று வினவிய அவள் குரல் தொனியே வேறாக இருந்தது.

சிவராமன் ஆவலோடு மேஜையைப் பார்த்தான். புத்தம்புது மணியார்டர்தான் ஒன்று பார்வையை இழுத்தது. வேறு கடிதங்கள் காணவில்லை.

“அப்படியென்ன விசேஷம்?” என்று கேட்டான். “மணியார்டர் அனுப்பும் வேளை தாண்டிவிட்டதே! பாவம், நாளைக்காவது ஒரு அவசர மணியார்டர் அனுப்பிவிடுங்கள் உங்கள் தங்கைக்கு!” என்று படபடப்புடன் சொல்லிவிட்டு அப்பால் போய்விட்டாள் கௌரி.

மேஜையை அணுகி, கூர்ந்து பார்த்ததும்தான், சிவராமனுக்கு தன் அன்னையின் கடிதம் வந்திருக்கும் விஷயம் தெரிந்து தகவல் விளங்கியது. கடிதம் பிரமாதச் செலவு வைக்கவில்லை. சிவராமனின் தங்கை சாந்தா, மூன்றாவது மகப்பேறு பெற்று மாதங்கள் நான்கு ஓடிவிட்டன. அந்தக் குழந்தைக்கு ஒரு பரிசு அனுப்புமாறு சிவராமனைத் தூண்டியிருந்தாள் அவன் அன்னை.

“சாந்தாவின் பிள்ளை நன்றாக ஊறிக்கொண்டு பொம்மைமாதிரி அழகாக இருக்கிறான். அவனுக்கு நாமகரணம் செய்த பெயர் ஜயராம கிருஷ்ணன். ஆனால் அப்பா ‘சாயி’ என்று கூப்பிடுகிறார் பிள்ளையை. அம்மாக்காரி சாந்தா, ‘சேகர்’ என்று கூப்பிடுகிறார்கள். குழந்தையை போட்டோ எடுத்து அனுப்புகிறதாக சாந்தா எனக்கு சொல்லுகிறாள். மருமானுக்கு உன் பரிசு என்ன? நீயும் கௌரியுமாக யோசனை செய்து ஏதாவது அனுப்பப்பார்!” என்று எழுதியிருந்தாள் அவன் தாய்.

இதற்குத்தானா கௌரி சினந்துளாள்?

இதற்குப் பரிசு விஷயம் புதிய விஷயம் அல்லவே! கொஞ்சநாட்களுக்கு முன்பு சாந்தாவேதான் எழுதியிருந்தாள். அப்பொழுது கௌரி கோபித்தாளா? இல்லை! அதுமட்டுமா? சந்தோஷமாகச் சிரித்தாள்!

இப்பொழுது, “மாமியாரின் சிபாரிசு தேவையா? என்ற கோபமோ? தாபமோ?

கௌரியின் மனச் சுணக்கம் சிறப்புள்ளது என்று சிவராமன் கருதினான். “சாந்தா எழுதினது போதாதா? நாம் அனுப்பமாட்டோமா? அம்மாவும் சொல்லணுமா? பல தடவை சொல்லும்படியாக நாம் பரிசுகள் அனுப்பி அலுத்திருக்கிறோமா? இதுதானே நமக்கு அளிக்கப்பட்டுள்ள முதல் சந்தர்ப்பம்! இதற்கு முன்பு சாந்தாவிற்குப் பிறந்த குழந்தைகளுக்கு அம்மாவே எல்லாம் செய்யவில்லையா? இந்தத் தடவை மாமா மாமி ஆசீர்வாதமும் சேரட்டுமே! நான் தடுக்கிறேனா?” இப்படித்தான் கௌரிக்கு ரோசம் வந்திருக்க வேண்டும்!

சிவராமன் முறுவலித்தான். ஆனால் அந்த முறுவல் விரைவிலே முறியடிக்கப்பட்டது. கௌரி உரிமையை அனுமதியாக்கி, அதையும் கட்டளையாக மொழிந்தபோதுதான் அவனுக்கு அது உறைத்தது.

“மணியார்டர் எத்தனை அனுப்புகிறீர்களோ அனுப்பி வையுங்கள். நான் ஒரு கடிதம் எழுதி வைக்கிறேன். அதைத் தபாலில் சேருங்கள்” என்று கௌரி சொன்னாள். அவர்களிடையே இருந்த ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகி விளங்குபவை கடிதங்கள். வீட்டிற்கு வருகிற கடிதங்கள், போகிற கடிதங்கள், எல்லாமே இருவருக்கும் உரியன. அதனால், மனைவி எழுதிய கடிதத்தை சிவராமன் படித்தான். படிக்கும்பொழுதே நெற்றியிலே மடிப்புகள் விழுந்தன. கௌரியின் பரந்த மனம் எப்பொழுது இவ்வளவு சுருங்கிப் போயிற்று? இத்தனை மனக்கசப்பா கௌரிக்கு?

“இப்பொழுது பிறந்திருக்கும் மருமானுக்கு நாங்கள் பரிசு அனுப்ப வேண்டியது அவசியம்தானா? இதற்கு முன்பு இரண்டு மருமாள் பிறந்தபோது என்ன கொடுத்தோம்? மாமாவின் பரிசும் பணமும் அந்தப் பெண்களுக்குத் தேவையில்லை என்ற ரீதியில் அந்தக் குழந்தைகளின் ராசி அமைந்துவிட்டது. பாவம், இந்த

மருமானுக்கு அந்த நல்ல ராசி இல்லை போலும்! ஏழை மாமாவிடமிருந்து இரண்டுபேர் சிபாரிசுடன் அதற்குப் பரிசு போய்ச்சேர நிர்பந்தம் வந்துவிட்டது! இந்தச் சிறுவிஷயமே, அதன் வருங்காலத்திற்கு சூசனையாக இருக்குமோ? வருத்தப்பட வேண்டியதுதான் ஆனால் உலக இயல்பை சற்று கவனித்தால் போதும், வருத்தமும் வராது, வியப்பும் இராது. தங்கை தமக்கைகளோடு பிறந்த பிள்ளைகளின் நிலைமை எப்படியிருக்கும் என்பது கற்பனைக்குரிய விஷயமா? அல்லவே! பெண்களுக்குப் போன மிச்சந்தான் பிள்ளைகளுக்கு! உடன் பிறந்தவர்களுக்குப்போன போன சொச்சந்தான் கைப்பிடித்தவளுக்கு! இது கண்கூடு!"

இப்படித்தாக்கிட்டுகிறாள் கௌரி!

"கௌரா!" என்று இரைந்து கூப்பிட்டான் அவன். "மாமியாருக்கு இப்படி ஒரு கடிதம் எழுத எத்தனைத் திண்ணக்கம் உனக்கு! எப்போது வந்தது இந்தத் துர்ப்புத்தி?" என்று கத்தினான்.

"உங்கள் மாமியாருக்கு எழுதியிருக்கும் கடிதம்தான் அது! அதற்குக்கூடக் கூசும்படியாகவா இருக்க வேண்டும் என் ஜன்மம்?" என்று கேட்டுவிட்டுப் போனாள் கௌரி.

சிவராமன் கடிதத்தைக் கூர்ந்து பார்த்தான். ஆம், அது அவளைப் பெற்றவளுக்கு எழுதப்பட்ட கடிதம்தான்! அன்பார்ந்த அம்மாவுக்குத்தான். 'அம்மா அவர்களுக்கு' அல்ல.

ஆனால் பெற்ற தாயாரிடம் தன் கணவனை ஏழை மாமா என்று ஏசிப் புலம்பவேண்டிய அவசியம் என்ன? கௌரிக்கு இந்தத் திமிர் மட்டும் தகுமோ?

"கிழித்தெறி கடிதத்தை!" என்று உரத்துக் கூவினான். கௌரி அதற்கும் சளைக்கவேயில்லை.

"கிழித்தெறியத் தயாராய்த் தான் அதை எழுதியிருக்கிறேன். கார்டு எழுதவில்லையே, வெற்றுக் காகிதந்தான். என் மனப்பாரம் இறங்கவேணுமே, அதற்காக இப்படி எழுதித் தீர்த்தேன்! இனிமேல் பேஷாகக் கிழிக்கலாம், தம்படி கூட வீணில்லை. நானும் செட்டுங்கட்டுமாய், கோடனையும் யோசனையுமாகத்தான் குடித்தனம் செய்கிறேன்! நம் நிலைமை தெரியாமலில்லையே!" என்று பொரிந்து தள்ளிவிட்டாள்.

சிவராமனுக்கு நெற்றிப்பொட்டு கனத்தது. கரும்புபோன்றவளான கௌரி, மூங்கிலாக மாறிவிட்டாளே!

•• •• ••

சிவராமனுக்கு வெளியலுவல்கள் அதிகம் உண்டு. ஆதலால் அவன் வீடு தங்குவதும் குறைவுதான். அதனாலேயே, அவனுடைய காதலும் குறைவு என்பது கௌரியின் மனக்குறையாக இருந்தது. அந்த மனக்குறையுடன் அவள் கணவனின் அன்பை நாடினாள். அவள் அன்பு நாடிய விதத்திலே மென்மை போதவில்லை.

'கரும்புக்கணுக்கள் போன்றவை, இல்வாழ்க்கையிலே ஏற்படும் பிணக்குகள்' என்று சிவராமனும்தான் அறிவான். ஆனால், இப்பொழுது பல்லை உடைக்கும் ஒரு கணுவாகி அன்றோ நிலைமை இருந்தது? பரிசு அனுப்ப கௌரி ஊக்கமளிக்கவில்லை. அதுமட்டுமா?

'என் பரிசு பெறாத மருமாள்களின் ராசி நல்ல ராசியாமே!' என்று நொந்தது அவன் நெஞ்சு. பரிசு அனுப்பவுதா? என்ன பரிசு? பண்டமா? பொருளா?

குழந்தைக்கு உபயோகப்படக்கூடிய நல்ல பண்டம் ஏதேனும் வாங்கிக்கொள்ளும்படி பணம் அனுப்பிவிடுவதுதான் சிறந்த முறை என்று முடிவு செய்து, இருபது ரூபாய் அனுப்பினான் சிவராமன். அன்பளிப்பு அனுப்பி,ஆசி எழுதி, தாயின் சொல் தட்டாமல் நடந்துகொண்டுவிட்டான். ஆனால் கௌரி அந்த விஷயத்திலே தலையிடவே இல்லை. அவன் பரிசு அனுப்பியது தெரியும் என்று காட்டிக்கொள்ளவில்லை; தெரியாது என்று பாவனை செய்யவுமில்லை. பொதுவாகப் பேசினாள். பொடி வைத்துப் பேசினாள். சண்டை பிடிக்கவில்லை. மோனம் சாதிக்கவில்லை. சகஜமாகப் பேசினாள். ஆனால் அவள் மாறியிருந்தாள்!

வீட்டிலே கள்ளன் புகுந்து கொள்ளையடித்ததற்கு அடையாளம், வளைந்து முறிந்திருக்கும் ஒரு ஜன்னல் கம்பி போதும். பறிபோன சாமான்களை நினைப்பூட்ட அந்தச் சிறு அம்சம் போதும் அதுபோலதான், கௌரியின் உள்ளத்திலே நல்லெண்ணம் பறிபோனதற்கும், ஒரு சிறு சூசனை இருந்தது.

எத்தனையோ விஷயங்களிலே கௌரி குதூகலமாகவும் பெருந்தன்மையாகவும் நடந்துகொண்டு எப்பொழுதும்போல இருந்தாள். ஆனால், சாந்தாவின் மைந்தனுக்கு அனுப்பப்பட்ட பரிசுத்தொகையைப்பற்றி அவள் ஒரு வார்த்தை பேசவில்லை. கடிதங்கள் எழுதச் சளைக்காதவள் கௌரி. "என்ன பரிசுப்பொருள் வாங்கினாய் மைந்தனுக்கு?" என்று சாந்தாவை ஒரு வார்த்தை கேட்டுக் கடிதம் எழுத முயற்சிக்கவே இல்லை. எத்தனையோ குழந்தைகளைப் பார்த்துக் கொஞ்சிப் பேசிச் சிரித்து மகிழ்ந்தாள்; ஆனால் சாந்தாவின் மைந்தனைப் பற்றிய நினைவே இல்லாதவளாகத் தோன்றினாள். அண்டை அயலிலுள்ள குழந்தைகளின் புகைப்படங்களை கௌரி சேகரித்து வைப்பதிலே ஊக்கங் குறைந்துவிடவில்லை; ஆனால் சாந்தாவின் புதல்வனின் புகைப்படம் வந்தபோது உணர்ச்சிகளை அடக்கினாளோ, உணர்ச்சி வற்றிப்போனாளோ?

மணமும் அழகும் குணமும் உள்ள பசுமஞ்சளைப்போன்றிருக்கும் கௌரி, திடீர் திடீர் என்று வறளி மஞ்சள் போலாகி விடும் பொழுது, சிவராமனின் மனம் புண்ணாகாமலில்லை. பொறுத்தான். பொறுமை அவனிடம், பொறாமை அவளிடம், என்னும் முறையிலே சில நாட்கள் ஓடிவிட்டன. இந்த 'முறை' கௌரிக்கு உவக்கவில்லைபோலும். காரணமில்லாமல் பிறந்தகம் போனாள். போகுமுன் வழக்கத்திற்கு மாறாக நடந்துகொண்டாள் கடிதங்கள் விஷயத்தில். வந்த கடிதத்தைப் பற்றிச் சொன்னாள். கையில் கொடுக்கவில்லை. எழுதிய கடிதத்தை, அடுத்தவீட்டுப் பையனிடம் கொடுத்து போடச் சொன்னாள். கணவனிடம் காட்டவில்லை, தரவில்லை. திடீரென்று "போய் வருகிறேன்" என்று புறப்பட்டுச் சென்றாள். சாந்தா சந்தோஷந் தெரிவித்துக் கடிதம் எழுதினாள் மதனிக்கு. அந்தக் கடிதத்தை அவன்தான் பார்த்து ஏற்றான். கௌரிக்கு அனுப்பவில்லை. சாந்தா கூறும் நன்றியுரையை ஏற்க கௌரிக்கு ஏது உரிமை? பரிசு அனுப்ப ஒவ்வாதவளுக்கு, இந்த வந்தனம் மட்டும இனிக்குமோ?

பிறந்தகத்திலிருந்து திரும்பி வந்த கௌரி உற்சாகமாக விளங்கினாள். அவளுடைய சிரிப்பிலும் பேச்சிலும் மகிழ்ச்சி மிகுந்திருந்தது. கொஞ்சநாள் பிரிவு செய்துவிட்ட மாறுதல் சிவராமனுக்கு வியப்பளித்தது. ஆனால் அந்த வியப்பிலே கலப்பற்ற கசப்பு மிதந்தது. கௌரியின் பேச்சிலே ஒரு விஷயம் மட்டும் மாறவில்லை! "அப்பப்பா! இந்த அப்பா அம்மாக்களுக்குத்தான் தங்கள் பெண்ணுக்காகச் செலவு செய்கிறதிலே என்ன சந்தோஷம், என்ன ஆசை!" என்று அடிக்கடி சொன்னாள். எதையோ பிரமாதமாகக் கண்டுபிடித்துவிட்டவள்போல உற்சாகத்துடன் சொன்னாள்!

இதன் காரணம் சிவராமனுக்கு விளங்கவில்லை. கௌரி, தன் பிறந்தகத்திலிருந்து உருப்படியாகக் கொண்டு வந்த பொருள் ஒன்றுமில்லை, எல்லாம் சில்லரை மல்லரைச் சாமான்கள்தான்!

சிவராமனுக்குப் பொறுமை போய்விட்டது. 'கௌரா! சதா நீ இப்படிப் பேசுகிறாயே - உன் வன்மம் எல்லாம் சாந்தா மேல்தானே? அவள் உன்னை மதித்து நன்றி கூறி எழுதியிருக்கிறாள் - நீ அதை ஏற்க லாயக்குத்தானா பார்த்துக்கொள்!" என்று சொல்லிவிட்டு, தங்கை எழுதிய கடிதத்தைக் கொடுத்தான்.

கௌரா அதைப்படித்தாள். "நான் கடிதம் போடாமலேயே சாந்தா கடிதம் எழுதுகிற அதிசயம் நடந்திருக்கே! உம், பின்னே எல்லாமே நடக்கும்!" என்று உல்லாசமாகச் சிரித்தாள். பிறகு, சாந்தாவுக்கு மறுமொழி எழுதினாள். கணவனிடம் கொடுத்தாள்.

ஆசையும் ஆசியும் மொழிந்து, அன்பு செறிந்த கடிதமாக கௌரி எழுதியிருந்தாள்!

'உதட்டில் தேன்; உள்ளத்திலே தேள்!' சிவராமன் சினந்தான்.

"பரிசுகள் பெறுகிறவர்கள் எல்லோரும் உயர்நிலையிருப்பவர்கள்! ஒருவன் எத்தனை உயர்வாக இருக்கிறானோ, அத்தனைக்கத்தனை அவனுக்குத் தரப்படும் பரிசுகளும் அதிகம். ஜயராம கிட்டு, தன் தமக்கைகளைவிட உயர்ந்தவனாயிருப்பான் என்பதிலே சந்தேகமென்ன? அவனுக்கு எங்கள் பரிசுகள் என்றென்றைக்கும் கிடைத்துக்கொண்டேயிருக்கட்டும்!" என்று கௌரி சாந்தாவுக்கு எழுதுகிறாள்! கோபம் வராதா அவனுக்கு? "அண்டப் புளுகு! வெளிப்பூச்சு! இதையும் கிழித்தெறி!" என்று சிவராமன் இரைந்ததில் தவறு இல்லை!

கௌரிசிரித்தாள்! அதுதான் தவறு! "சிரிக்கிறாயா?" என்று ரோசமுடன் கடிதத்தைக் கிழித்துப்போட்டுவிட்டான் அவன்.

கௌரியின் கண்களிலே நீர் சுழவிட்டது. "சரி, உண்மையை எழுதிவிடுகிறேன்!" என்று திணறியபடி சொல்லி அப்பால் சென்றவள், சற்று நேரம் பொறுத்து அவனிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனாள். அது அவனுக்கு வரையப்பட்டிருந்தது!

"சாந்தாவுக்கு நான் எழுதியது மனப்பூர்வமாக எழுதிய கடிதம் தான். எனக்கு யார் மேலும் கோபம் இல்லை. சாந்தாவிற்குப் பிறந்த முதல் பிள்ளை என்ற ஆசையில், மாமாவும் பரிசளிக்கட்டுமே என்று நம் அம்மாவிற்குத் தேன்றிவிட்டது என்று நான் தெரிந்து கொண்டுவிட்டேன். உங்கள் அம்மாவின் இந்த ஆசையை, நான் என் பிறந்தகத்தில் உணர்ந்தேன். நமக்கு, ஜாதகப்படி, இரண்டு பெண், இரண்டு பிள்ளை, பிறக்கப் போகிறதாக ஜோசியர் சொன்னாராம். ஜோசியருக்குக் காணிக்கை பதினைந்து ரூபாய்; சொன்ன பலனை அடைய வேண்டி, என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்து ஆபரேஷனும் நடத்தினார்கள். அதற்குச் செலவு நிறைய ஆயிற்று. பலன் ஏற்பட்டுவிட்டால், பிறகு எத்தனை செலவுகள் உண்டோ! அதற்கும் என் பெற்றோர் கூசவில்லை. பூவும் பிஞ்சும் பார்த்து, தாத்தா பாட்டி ஸ்தானத்தின் பெருமையை ஏற்க அவர்களுக்குத்தான் எத்தனை ஆசை? இதையெல்லாம் பார்த்த பிறகுதான், நம் அம்மாவின் கடிதத்தை நான் கடிந்தது தவறு என்று தெரிந்தது.

"பிறந்ததுமே மாமாவின் பரிசைத் தட்டிக்கொண்ட மருமான் வாழ்க்கை முழுதும் மாமாவின் பரிசுகளைப் பெறும்படியாகட்டும் என்று நான் எழுதுவது எதனால்? மாமா ஸ்தானத்தில் கொடுத்தவர் மாமனார் ஸ்தானத்திலும் எப்போதும் பரிசுகள் வழங்கிக் கொண்டிருக்கட்டும்" என்று சொல்கிறேன்! தவறா? "தாத்தா பாட்டி கொடுக்கும் வரிசைகள் போதாதா இந்த இளவரசனுக்கு? மாமா மாமி கப்பம் கட்டணுமோ?" என்று கொஞ்ச நாள் நான் மனம் வெதும்பியது உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் இருந்தது. அது என் தவறு அல்ல. என் பெண்மையின் தவறு.

"மருமானுக்கு உன் பரிசு என்ன மன்னி?" என்று முன்பு சாந்தா கேட்டிருந்தாளே, கடிதத்திலே? நான் அதற்குக் கற்பித்த பொருள் வேறு! 'நம் மருமானுக்கு அவள் தன் மருமாளைப் பரிசு கேட்கிறாள்' என்று தமாஷாக எடுத்துக்கொண்டேன். பிறகு, அம்மா கடிதங்கண்ட பிறகுதான், என் 'மதியீனம்' விளங்கியது. அந்த ஏமாற்றத்திலே வேற்றுமை பிறந்தது. தமாஷாக நினைத்ததே தோஷமாக என் மனசு சரியாயிருக்கவில்லை. பிறகுதான், என் பெற்றோர் மனதை அறிந்த பின்னர், உங்கள் பரிசு மருமானைச் சேர வேண்டியதுதான் என்று ஆறுதல் வந்தது!"

பறிபோன பொருள் மீட்கப்பட்டதுபோலத் தோன்றியது சிவராமனுக்கு. சாந்தாவின் பரிசு விருப்பத்தைக் கரும்பென சுவைத்த கௌரி, தன் அன்னையின் பரிசு விருப்பத்தை மூங்கிலாகக் கருதியது தவறு அல்ல! சிறப்பு எதிர்பார்த்த இடத்திலே ஏமாற்றம் ஏற்பட்டால், மனசு எப்படிக் கலங்கும் என்பதை அவனும்தான் உணர்ந்திருந்தானே! ஆருயிர் மனைவிமேல் அவனுக்கு எத்தனை கோபம் வந்ததே! அவளுக்கு மாமியார் நாத்தனார் மேல் சினம் பொங்கியதும் அப்படித்தானே? நல்லவேளை, கரும்பு கரும்பாகவே இருந்துவிட்டது. அதன் சாறு, கரும்புச்சாறு, எதிரே தயாராக இருக்கிறது. ஏழாண்டுகள் சுவைத்த இல்லற வாழ்க்கையின் இன்பமெல்லாம் அந்த நேரத்தில் திரண்டு நிரம்பிவிட்டது.

**********

(சுதேசமித்திரன், அக்டோபர் 11, 1953)